முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள். 06.07.2026

O.S. No. 75/2023

பிவா,சா-1 - உதயகுமார்

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

17. நான் பிவாசாஆ 1 ஆவணத்தில் அசல் தாக்கல் செய்யவில்லை என்றாலும் அதன் சான்றிட்ட நகல் தான் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். அசல் என் கைவசம் இருக்கிறது. பிவாசாஆ 1 ஆவணத்தின் அடிப்படையில் தான் புல எண். 1090/1 ல் 3 சென்ட் கிரயம் பெற்றதாக கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். அதில் 2 புல எண்கள் இருக்கிறது. மேற்படி 3 சென்டுக்கு உரிய மூல ஆவணம் எண்.2550/1971 என்றால் சரிதான். மேற்கண்ட மூல ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வாங்கிய ஆவணத்தை மட்டும் தான் தாக்கல் செய்திருக்கிறேன்.என்னிடம் காட்டப்படுவது தான் மேற்படி ஆவணஎண். 2550/1971 படியான மூல ஆவணமா என்றால் நான் இதுவரை பார்த்ததில்லை.

18. நான் 3 சென்ட் யாரிடமிருந்து கிரயம் வாங்கினேன் என்றால் பழனிகுமாரிடம் இருந்து கிரயம் வாங்கினேன். நான் 1987 ல் கிரயம் வாங்கிய ஆவணத்துடன் வரைபடம் இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். அந்த காலத்தில் வரைபடம் இணைக்கமாட்டார்கள். மேற்படி கிரய ஆவணம் எழுதித்தந்த தேதியன்று நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை. அதனால் பிவாசாஆ 1 சமயத்தில் என்ன பேசிக்கொண்டார்கள் என்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் ஆவணத்தின் படிதான் தெரியும் என்றால் சரிதான்.

19. மேற்சொன்ன மூல ஆவணஎண்.2550/1971 க்கு முன் பத்திரம் 4223/67 என்றால் அது

பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 4223/67 ஆவணத்தை நான் பார்த்ததில்லை. மேற்கண்ட 2 மூல ஆவணங்களிலும் புலஎண்.1090/1 ல் எனக்கு விலைக்கு தந்த நபருக்கு 1 ½ சென்ட்தான் உரிமை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 3 சென்ட் உரிமை. புல எண். 1090/1 -க்கான பழைய புல எண் 10447 ஆகும்.

20. என்னுடைய ஆவணத்தில் 2550/71 ல் ஆவணப்படி என்று பிவாசாஆ 1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 4238 ஆவண எண் படி பிரித்தது என்று தான் உள்ளது. சுப்ரமணிய நாடாருக்கு எந்த புல எண்ணில் சொத்து கிடைத்தது என்றால் 1076/9 ல் 6 ½ சென்டும் 1090/1 ல் 3 சென்டும் கிடைத்தது. வழக்கில் நான் சொல்லக்கூடிய 3 சென்ட் பிவாசாஆ 1 ஆவணத்தில் கண்ட 2 வது ஐட்ட சொத்து என்றால் சரிதான். பிவாசாஆ 1 ஆவணத்தில் 2 வது ஐட்ட சொத்து என்னுடைய பெயருக்கு 1971 ம் வருடம், 2550 பத்திரபடி கிடைத்ததாக உள்ளது என்றால் அதுவும் உண்டு ஆவண எண் 4238 படியும் எங்களுக்கு கிடைத்ததாக இருக்கிறது. ஆவண எண்.4238 ஆவணத்தில் கிடைத்த புல எண். என்னவென்றால் 1076/9 மற்றும் 1090/1 ஆகும். நான் வேண்டுமென்றே வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

21. எனக்கு எழுதித்தந்த நபருக்கு 1 ½ சென்ட்தான் பாத்தியம் என்று தெரிந்து கொண்டு ஆவணஎண். 2550/1971 மற்றும் ஆவணஎண்.4223/67 ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் மறைக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மேற்கண்ட ஆவணத்தின் படி எனக்கு 3 சென்ட் உரிமைப்பட்டதாக சொல்வது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. மேற்சொன்ன 3 சென்ட் சொத்தை நான் உட்பிரிவு செய்தேனா என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் இடத்தை பார்வையிடும் போது 3 சென்ட் பொறுத்து வரைபடம் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் தான் வரைபடம் இடத்தை

பார்வையிட்டு வரைந்தார். நான் நீதிமன்ற ஆணையரிடம் வாதி இடத்துக்கு செல்லும் பாதையை மறைத்து பொய்யான இடத்தை காட்டினேன் என்றால் சரியல்ல. வாதி பெயருக்கு உள்ள 1355/2001 ஆவணத்தை நான் பார்த்தேனா என்றால் 2022 ம் ஆண்டுக்கு பிறகுதான் பார்த்தேன்.

22. வழக்கு சொத்தை ஆலங்கோட்டு விளை என்று சொல்வார்கள் என்றால் சரிதான். 1076/9 சொத்தை விளாத்திவிளை என்று சொல்வார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பழைய காலத்தில் அவ்வாறு அழைப்பார்களாக இருக்கும். 4238/1120 ஆவணத்தை நான் பார்த்திருக்கிறேன். அந்த ஆவணத்தில் எ பட்டிகை சொத்து சுப்ரமணிய நாடார் பாகத்துக்கு கிடைத்தது என்றாலும் பி பட்டிகை ஆண்டி நாடார் பாகத்துக்கு கிடைத்தது என்றால் சரியல்ல. பி பட்டிகை சொத்து பழனிகுமாருக்கு கிடைத்தது. மேற்படி 4238/1120 ஆவணத்தையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் கைவசம் இருக்கிறது.

23. புல எண் 1076/9 சுப்ரமணிய நாடாருக்கு கிடைத்து பழனிகுமார் கிரயம் வாங்கியது என்றால் சரிதான். மேற்படி புல எண்1076/9 மேற்சொன்ன பாக பத்திரத்தில் எ பட்டிகை சொத்து என்றால் சரிதான். மேற்சொன்ன 4238/1120 ஆவணத்தில் பி பட்டிகை 4 ம் நம்பர் வஸ்துவான ஆலங்கோட்டு விளையில் மேற்கருகில் தெற்கு ஸ்தாபித்த எ பட்டிகை 4 நம்பர் வஸ்துவிற்கு வழி போவதற்கு எ பட்டிகை பாகஸ்தர் பி பட்டிகை பாகஸ்தருக்கு வழி பாதை போட்டுக்கொடுத்து கொள்ள வேண்டியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மை தெரிந்து விடும் என்பதால் அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அந்த ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் நிலையில் இல்லை.

சிதைந்து உள்ளது. சான்றிட்ட நகல் பெற்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

24. வாதி பெயரில் உள்ள 1355/2001 ஆவணத்தில் ஆண்டி நாடாருக்கு கிடைத்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆண்டி நாடாருக்கு கிடைத்தது உண்மைதான் ஆனால் அந்த ஆவணத்தை எழுதிக்கொடுத்தவருக்கு 4 ல் 1 பாகம் மட்டுமே உரிமை. மேற்சொன்ன பி பட்டிகை சொத்து என்பது எத்தனை சென்ட் என்றால் 27.62 சென்டாகும். 27.62 சென்ட் என்று எந்த முன் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் வாதி தாக்கல் செய்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆவண எண்.4238/1120 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆவண எண்.4238/1120 ஆவணத்தில் கூடுதல் வீஸ்தீர்ணம் புலஎண்1090/1 க்கு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 24 ½ ஏர்ஸ் குறிப்பிடப்பட்டுள்ளது.

25. வாதி அவருடைய ஆவணத்தில் கூடுதல் வீஸ்தீர்ணம் எழுதி வாங்கிவிட்டார் என்று ஆட்சேபனை செய்தேனா என்றால் இல்லை. அது செல்லாது என்பதால் செய்யவில்லை . 1973 ல் எனது தகப்பனார் 1 அடமான பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தை எனக்கு படிக்க தெரியவில்லை. மேற்படி ஆவணத்தில் மால் நாடார் எழுதிக்கொடுத்த அடமான பத்திரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அந்த ஆவணம் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆவணத்தில் பி பட்டிகை சொத்தாக கிடைத்ததை எனது தகப்பனார் அடமானம் கொடுத்தார் என்றாலும் அதில் நான் சாட்சி கையெழுத்து போட்டேன் என்றால் ஞாபகம் இல்லை.

26. அதில் தென்வடல் சமபங்கு 3 ல் மேற்கணைய பங்கு 2 க்கு 51 ¼ சென்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்கண்ட விவரம் எனக்குதெரிந்தும் உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த வரைபடத்தில் 3 சென்ட் என்று குறிப்பிடப்பட்டிருப்பது

தவறானது என்றாலும் அது நான் சொன்னதன் அடிப்படையில் பொய்யாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வாதியின் கைவசம் உள்ள சொத்தில் தெற்கு பக்கமும், வடக்கு பக்கமும் கல் சுவர் உள்ளது என்றால் சரியல்ல. பிரிவின்றி கிடக்கும் ஆண்டி நாடார் சொத்து தெற்கு பக்கம் கல் சுவர் இல்லை.

27. மேற்கண்ட சொத்து பிரிவின்றி ஒன்றாக இருப்பதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்து தள்ளுபடி செய்யப்பட்ட அவஎண். எனக்கு தெரியாது. அதன் மேல்முறையீட்டு எண் 4/2025 ஆகும். அந்த வழக்கின் ஆண்டி நாடாரின் சொத்துகள் அவரது பிள்ளைகளுக்கிடையில் வாய்மொழி பாகம் அடிப்படையில் பிரிக்கப்பட்டதாக தீர்ப்பில் சொல்லப்பட்டது என்றால் இல்லை. மேற்படி அவஎண். தள்ளுபடி ஆன விவரத்தை என்னுடைய சாட்சி நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் அந்த வழக்கிற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை.

28. வழக்கின் பி பட்டிகை சொத்து வாதியின் எ பட்டிகை சொத்துக்கு பாதை என்றால் சரியல்ல. நாங்கள் வாங்கிய பத்திரத்தில் அப்படி இல்லை. ஆண்டி நாடார் மகன் சுப்ரமணிய நாடார் வீடு எந்த பக்கம் இருக்கிறது என்றால் புல எண். 1090/1 ல் இருக்கிறது. மேற்படி புல எண்ணில் வடக்கு பக்கம் சுப்ரமணிய நாடாருக்கு 4 ல் 1 பாகம் உண்டு. சுப்ரமணிய நாடார் வீட்டிற்கான மின் இணைப்பு 2238 என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது என் வீட்டிற்கான மால் நாடார் பெயரிலான மின் இணைப்பு என்றால் சரிதான். மேற்படி ஆவணம் வாசாஆ 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

29. என்னுடைய வீட்டிற்கான மின் இணைப்பு மற்றும் சுப்ரமணிய நாடார் வீட்டிற்கான மின் இணைப்பு மின் கம்பிகள் வழக்கு சொத்து வழியாக செல்கிறது என்றால் சரியல்ல. மால் நாடார் சொத்து வழியாக தான் செல்கிறது. மேற்படி புலஎண் 1090/1 என்றால் சரியல்ல. 2 புல

எண்கள் வழியாகவும் செல்கிறது. வாசாஆ 2 ஆவணம் எந்த தேதியில் பாகம் வைத்தார்கள் என்று சொல்லாததால் செல்லத்தக்கது இல்லை என்று நான் சொல்லியிருப்பது ஏற்கத்தக்கது இல்லை என்றால் சரியல்ல.

30. 1223/1987 ஆவணத்தின் அடிப்படையில் 3 சென்ட் சொத்து நீதிமன்ற ஆணையர் காட்டியிருப்பது தவறானது என்றால் சரியல்ல. நான் கிரயம் பெற்ற 19.10.1987 தேதிய கிரய ஆவணத்தை எழுதிக்கொடுத்த நபருக்கு அந்த சொத்தை எழுதிக்கொடுக்க உரிமை இல்லை என்றால் சரியல்ல. அந்த சொத்தை வைத்து நாங்கள் 2 அடமானம் வைத்துள்ளோம். மேற்கண்ட அடமானம் எந்த ஆண்டு என்றால் 09.12.1987 ஆவண எண்.1421/1987 அதன் பிறகு மேல் அடமானம் ஆவண எண்.1558/1993 படி வைத்துள்ளோம். மேற்கண்ட 2 அடமான ஆவணங்கலும் உரிமை இல்லாத சொத்தை உரிமை இருப்பதாக காட்ட மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல.

31. வழக்கு சொத்துக்கு வாசாஆ 2 படி, முறையாக தனித்தனியாக இருக்கிறது என்றால் சரியல்ல. நான் 01.01.2022 அன்று பி பட்டிகை சொத்தை அடியாட்கள் உதவியுடன் ஆக்கிரமிக்க முயற்சி செய்தேன் என்றால் சரியல்ல. வாதியை சொத்துக்கு போக விடாத அளவுக்கு தடை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. அதனால் வாதிக்கு வழக்கில் கோரியுள்ள அனைத்து பரிகாரங்களும் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த உத்தேச வரைபடம் தவறானது என்றால் சரியல்ல. புலஎண்.1090/1 ல்எனக்கு 3 சென்ட் உரிமையில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் உண்மையான சங்கதிகளை தெரிவிப்பது கிடையாது என்றால் சரியல்ல. எனது முதன்மை சாட்சிய நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் பொய்யானது என்றாலும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் சொத்தை அபகரிக்க வேண்டும்

என்ற எண்ணத்ததில் பல்வேறு இடையூறு செய்து அதே எண்ணத்தில் நீதிமன்றத்தில் உண்மையான ஆவணங்களை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.